**பாடம் 11**

# கடன்: ஓர் அனுதின தீர்மானம்

**மனன வசனம்**

**யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ, அவனுக்கு வரியையும், எவனுக்கு தீர்வைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு தீர்வையும் செலுத்துங்கள். ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனே அல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். ரோமர் 13:7,8.**

**ஆராய்ச்சிக்கு**

**சங்கீதம் 37:21; மத்தேயு 4:3-10; மத்தேயு 6:33; உபாகமம் 28:12; நீதிமொழிகள் 13:11; நீதிமொழிகள் 21:5; 2கொரி 4:18.**

மார்ச் 10 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



சிலசமயங்களில் உங்களுக்குக் கடன்கொடுக்க யாராவது முன்வருவார்கள். அவ்வாறு கொடுப்பவரும் நல்ல நோக்கத்திற்காகவே அப்படிச் செய்யலாம். அதாவது, நீங்கள் பணப்பிரச்சனையில் இருந்ததால் உங்களுக்கு உதவவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமாக இருக்கும். ஆனால் பெரும்பாலும், நல்ல மனதோடு யாரும் கடன்கொடுப்பதில்லை. கொடுத்த பணத்தை வைத்து, உங்களிடமிருந்து இன்னும் அதிகப் பணம் சம்பாதிக்கலாம் என்பதே நோக்கமாக இருக்கும்.

முடிந்தவரையிலும் கடன்வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். சிலசமயங்களில் கடன்வாங்கவேண்டிய அவசியம் உண்டாகலாம். உதாரணமாக வீட்டுக்கடன், கார்க்கடன் வாங்குகிறோம்; ஆலயம்கட்டவோ, படிப்புக்கோ கடன் வாங்கவேண்டியுள்ளது. ஆனால், கூடியமட்டும் கடன்வாங்கக் கூடாது என்கிற நோக்கத்துடன் ஞானமாக எல்லாவற்றையும் செய்வது நல்லது.

ஆனாலும், கவனமாக இருக்கவேண்டும். பணம் இல்லாவிட்டாலும் செலவு செய்வதுதான் தேவனுடைய மக்களின் குணங்களில் 'பேராசையும் பூலோக ஐசுவரியங்களின் மேலான நாட்டமும் ஆதிக்கம்கொள்ளச் செய்கின்றன. இத்தகைய தன்மைகள் ஆதிக்கம்செலுத்தும் வரையிலும் இரட்சிப்பும் கிருபையும் அருகே நெருங்கமுடியாது.' – *EGW, EW, p 267.*

நம்முடைய திறன்களையும் திறமைகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்; கடனைத் தவிர்ப்பதற்கான அனைத்தையும் செய்யவேண்டும். கடன்குறித்து வேதாகமம் என்ன சொல்கிறதென இந்த வாரம் படிப்போம்.

2017, மார்ச் 17 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## இரவல்வாங்கி, பயன்படுத்துதல்

யோர்தான் நதியோரமாக தீர்க்கதரிசிகள் மரம்வெட்டிக் கொண்டிருந்தார்கள்; எலிசாவும் உடன் இருந்தார்; அப்போது 'கோடாரி தண்ணீரில் விழுந்தது.' தீர்க்க தரிசிகளில் ஒருவன் 'ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே' என்று அலறினான். 2இராஜா 6:5. 'இரவல் வாங்குவது' என்றால், வேறொரு வருக்குச் சொந்தமானதை அவருடைய அனுமதியுடன் பயன்படுத்துவதாகும். இதில் சவாலும் உண்டு, பொறுப்பும் உண்டு. கடன்வாங்கப்பட்ட கோடாரி போன்றுதான் கடன்வாங்கிய பணமும்; ஆனால் ஒழுங்காகப் பயன்படுத்தாவிட்டால், இரவல் பணம் பயங்கர விளைவுகளை உண்டாக்கலாம்.

செலவழிக்கவே பணத்தை இரவல் வாங்குகிறோம். வாங்கியதைத் திரும்பச் செலுத்திவிடலாம் என்றும், அப்படியொன்றும் பணப்பிரச்சனை எதிர்காலத்தில் நேரிடப்போவதில்லை என்றும் ஊகித்தே அந்தச் சவாலை எடுக்கிறோம். ஆனால், எதிர்காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பது நமக்குத் தெரியாது. பிர 8:7. எனவே, பணத்தை இரவல்வாங்குவதில் எப்போதுமே சவால் உண்டு.

**கடன்பற்றி பின்வரும் வசனங்கள் சொல்வது என்ன?**

*சங்கீதம் 37:21* ____________________

*பிரசங்கி 5:5* ____________________

*உபா 28:44,45* ____________________

ஞானமாகப் பயன்படுத்தவேண்டும் என்று தீர்மானித்தே கடன்வாங்குவோம்; ஆனால் கடன்வாங்கின பணத்தைச் செலவிடுவதற்கு பலத் தூண்டல்கள் வருவதால் சில பயங்கர பிரச்சனைகளை அது உருவாக்கிவிடுகிறது. நம் தகுதியையும் மீறி செலவிடுகிறவிதத்தில் வாழ்வதற்கே பெரும்பாலும் அந்தப் பணத்தைப் பயன்படுத்துகிறோம். கடன்வாங்கி, செலவழிப்பதே இன்றைய நுகர்வோர் கலாச்சாரத்தின் போக்கு; ஏழை, பணக்காரர் என எல்லாரையும் அது வாதித்துள்ளது. கடன்வாங்கத் தூண்டப்படும்போது, நாம் தேவனுடைய வழிகாட்டலை நாட வேண்டும். 1கொரி 10:13. ஏனெனில், கடன்வாங்குவது ஒரு சாபம். உபா 28:43-45.

பணம் கடன்வாங்குகிற மோசமான பழக்கத்தை ஆரம்பத்திலேயே கிள்ளி விடுங்கள். ஏற்கனவே கடன்வாங்கியிருந்தால் சீக்கிரமே அதைத் திரும்பக் கொடுத்துவிடுங்கள். ஞானமாக பணத்தைச் செலவிடவும், தேவனுடைய பணத்தைச் செலவிடுவதில் வல்லுநர்களாக இருக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும்; உலகப்பணம் நம்மைக் கட்டுப்படுத்திவிடக்கூடாது.

ஒரு சில சூழ்நிலைகளில் கடன்வாங்கவேண்டிய தேவை உண்டாகாலாம். ஆனால், கவனமாக அதைச் செய்யவேண்டும்; கடனை எல்லாம் முடிந்தமட்டும் சீக்கிரமே கொடுக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு வாங்கவேண்டும்.

கடன்வாங்கும் பழக்கத்தில் சிக்கியுள்ள ஒருவர் என்னென்ன ஆவிக்குரிய ஆபத்துகளுக்கு ஆளாகிறார்?

# உக்கிராணத்துவமும் அற்பநிமிட மனநிறைவும்

'அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு அப்பத்தையும் பயற்றங்கூழையும் கொடுத்தான்; அவன் புசித்துக் குடித்து எழுந்திருந்து போய்விட்டான். இப்படி ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம்பண்ணினான்.' ஆதி 25:34. மனம் போன போக்கில் அலைந்து, வேட்டையாடி ஏசா நாட்களைக் கழித்துவந்தார். அவர் பசியோடு வந்திருந்தாலும் நிச்சயமாகச் சாகப்போவதில்லை; ஆனாலும், கூழ்வாசனை வந்ததுமே உடனடியாக அதைக் குடிக்கவேண்டுமென்கிற ஆசை உண்டானது. உணர்ச்சிகளின் வேகத்திற்குக் கட்டுப்பட்டார்; ஓர் இமைப்பொழுதில் தன் பகுத்தறிவை மழுங்கடித்தார்; அற்பநிமிட மனநிறைவுக்காக தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்டார். மீண்டும் சேஷ்டபுத்திரபாகத்தைப் பெற நினைத்தபோது, 'கண்ணீர் விட்டு, கவலையோடே தேடியும்' பெறவில்லை.

இயேசு இதற்கு எதிர்மாறானவராக இருந்தார். 40 நாட்கள் உபவாசமிருந்து, பயங்கரப் பசியுடன் இருந்தார்; சாத்தான் மூன்றுமுறை அவரைச் சோதித்தான். மத் 4:3-10. அந்தச் சோதனைகளின் தன்மையை இயேசு அறிந்துகொண்டார்; தான் பெலவீனப்பட்டு இருந்தபோதிலும், அற்பநிமிட மனநிறைவுக்கு அவர் இடங் கொடுக்கவில்லை. இயேசு தம் வாழ்நாள் முழுவதிலுமே பாவ ஆசைகளுக்கும், அற்பநிமிட இச்சைக்கும் இடமளிக்கவில்லை; அதன்மூலம் நாமும் பாவத்திற்கு எதிராக வல்லமையைப் பெறமுடியுமெனக் காண்பித்தார். அவர் தம்முடைய சேஷ்டபுத்திரபாகத்தை இழக்கவில்லை; தம்மோடு சுதந்தரராகும்படி எல்லாரையும் அவர் அழைக்கிறார். ரோமர் 8:17; தீத்து 3:6. இயேசு தாம் சோதிக் கப்பட்டபோது செய்ததுபோல நாமும் செய்தால் சேஷ்டிபுத்திரபாகத்தை நாம் தக்கவைத்துக் கொள்ளலாம். 1கொரி 10:13.

இங்கேயே அனுபவித்து மகிழும் விஷயங்கள்தாம் இவ்வுலகம் தரக்கூடியவற்றில் மிகச்சிறந்தவை; இனிவரும் வாழ்வுக்குரிய அனுபவம் எதையும் இவ்வுலகம் தரமுடியாது. தேவனுக்காக வாழ்வது என்பது, நமக்காக வாழ்வதற்கு எதிரானது.

***உண்மையாக வாழ்கிறவர்கள்கூட அற்பநிமிட மனநிறைவின் ஆபத்துகளில் சிக்க வாய்ப்புள்ளது. அதுபற்றி, வேதாகமம் சொல்வது என்ன? 2சாமு 11:2-4; ஆதி 3:6; பிலி 3:19; 1யோவான் 2:16; ரோமர் 8:8.***

மனம் கட்டுப்பாடற்ற நிலையில் இருப்பதை அற்பநிமிட மனநிறைவுக்கு இரையாவது காட்டுகிறது; நீண்டகால இலக்குகளை அடைவதற்குத் தேவையான பொறுமைக்கு இது எதிரி; இது கடமையை அலட்சியம் செய்யக்கூடியது. அற்பநிமிட ஆசையைக் கட்டுப்படுத்த பழகவேண்டும்; சூழ்நிலைகளையும் அழுத்தங்களையும் கையாளுவதற்கு இந்த வாழ்க்கைத் திறனை வளர்க்கவேண்டும்; குறிப்பாக, உலகம் தரக்கூடிய தூண்டல்களை மேற்கொள்ளவும், அறிவில்லாமல் கடன் வாங்காமல் இருக்கவும் இது அவசியம். ஆனால் உடனடி ஆதாயம், தற்காலிகத் தீர்வு, உடனடி பணக்காரராவது போன்றவற்றை விரும்புகிற இக்காலக்கட்டத்தில் இந்தக் கருத்தை யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அற்பநிமிட மனநிறைவுக்கு ஆளாகிவிட்டால், உடனடியாக என்ன ஆதாயம் கிடைக்கும் என்கிற மனநிலை வரும்; அது மீண்டும்மீண்டும் வளரும். தேவன் தந்துள்ள ஈவுகளின் உக்கிராணக்காரர்கள் இந்தக் கண்ணியில் சிக்கிவிடக்கூடாது.

## இருப்பதை வைத்து வாழ்தல்

'வேண்டிய திரவியமும் எண்ணெயும் ஞானவானுடைய வாசஸ்தலத்தில் உண்டு; மூடனோ அதைச் செலவழித்துப்போடுகிறான்.' நீதி 21:20. நிதியைப் பொறுப்போடு நிர்வகிக்கும் உக்கிராணத்துவத்தையும், ஆடம்பரமாகவும் வீணாகவும் செலவிடும் நிர்வாகத்தையும் இந்த வசனம் வேறுபடுத்திக் காட்டுகிறது. மூடர்கள் தங்களிடம் இருப்பதை வைத்து வாழ்வதற்குத் திட்டமிடுவதில்லை. ஞானமாகச் செலவிடுவது அல்லது சிக்கனமாக வாழ்வது கடினமானதென்றும், தங்களுக்கு ஒவ்வாதென்றும் நினைக்கிறார்கள்; கடன்வாங்கியாவது தாங்கள் விரும்புகிறபடி செலவழிக்கிறார்கள். ஆனால், வீட்டுக்கடன்போன்ற கடன்களை வாங்கும்போதும்கூட, நன்றாக யோசித்து, இருக்கிறதை வைத்து வாழவேண்டும் என்கிற உணர்வோடு கடன்வாங்கவேண்டும்.

பணக்காரர்கள் தங்களிடம் இருப்பதை வைத்து வாழ்ந்துவிடலாம். ஆனால் அவர்கள் எப்போதும் தங்கள் ஆஸ்திபற்றியும், அதை எவ்வாறு பாதுகாப்பது என்பதுபற்றியுமே சிந்திப்பார்கள். சம்பளத்தை எதிர்பார்த்து வாழும் வறியவர்கள் ஐசுவரியத்தை பற்றி அல்ல, எப்படி பிழைப்பை நடத்துவது என்று வருந்திக்கொண்டிருப்பார்கள். ஆனாலும், நம்மிடம் இருப்பதை வைத்து வாழ்வதற்கு வேதாகமத்தில் ஆலோசனை உள்ளது. மிகவும் எளிமையான ஒரு வாழ்க்கை வாழும்படி பவுல் பரிந்துரைக்கிறார்: 'உண்ணவும் உடுக்கவும் (வீட்டையும் சேர்க்கலாம்) நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்.' 1தீமோத்தேயு 6:8. பூலோக ஆஸ்திகளை பவுல் முக்கியப்படுத்தவே இல்லை; கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால் போதுமென்கிறார். பிலி 1:21.

***எல்லாவற்றிற்கும் மேலாக நம் மனதில் பதிந்திருக்கவேண்டிய நியதி எது? மத் 6:33. இப்படிப்பட்ட வாழ்க்கையை நாம் வாழ்வதற்கு நாம் என்ன செய்யலாம்?***

நம்மிடம் இருப்பவற்றை வருமானமாகப் பார்க்காமல், சரியாக நிர்வாகம் செய்யவேண்டிய ஆதாரங்களாகப் பார்க்கவேண்டும். இதற்கு வரவுசெலவு திட்டம் பயனுள்ளதாக இருக்கும். வரவுசெலவைத் திட்டமிடுவது வளர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு திறமை; இதற்குக் கவனமான ஆராய்ச்சி தேவை. சமச்சீரான ஒரு நிதித்திட்டத்தைக் கையாண்டு, வெற்றிகிடைப்பதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறையும் முயற்சியும் தேவை. நீதி 14:15. நிதி மேலாண்மைத் திட்டத்தில் வெற்றிபெறும் அர்ப்பணிப்பு நம்மிடம் இருந்தால், தர்மசங்கடத்திற்குள் நம்மைக் கொண்டுசெல்லக்கூடிய தவறுகளைத் தவிர்க்கக்கூடும்.

பணத்தை சரியாக நிர்வகிக்காதவராக இருந்தால், ஒரு வரவுசெலவு திட்டத்தைப் போடுங்கள். சிக்கலான திட்டமாக இருக்கவேண்டாம். ஒரு சில மாதங்களுக்கான செலவுகளைக் கூட்டி, சராசரியாக ஒரு மாதத்திற்கு எவ்வளவு செலவாகிறதெனப் பாருங்கள். உங்களிடம் எவ்வளவு இருக்கிறதோ அதற்குள்ளாக வாழ்வது முக்கியம்; கூடியமட்டும் கடன்வாங்காதீர்கள்.

சீடத்துவத்தின் விலையை எடுத்துக்காட்டும் ஒரு சம்பவத்தை லூக் 14:27-30இல் இயேசு சொல்கிறார். அதாவது, ஒரு கோபுரத்தைக் கட்ட நினைப்பவன் அதை முடிக்க இயலாமல் போனால் என்னவாகுமென்கிறார். உக்கிராணத்துவம்குறித்த என்ன பாடம் இதில் உள்ளது?

**கடன் பிரச்சனையில் நாம் சிக்கித்தவிக்கலாமா? உபா 28:12. இதிலுள்ள நியதி என்ன?**

கடன் வாங்காமல் இருப்பதற்கு பகுத்தறிவே போதுமானது. பிறர் கடனை அடைக்கிற பிரச்சனையிலும் சிக்கவேண்டாமென வேதாகமம் கூறுகிறது. நீதி 17:18; 22:26. கடன் நம் எதிர்காலத்தைப் பாதிக்கிறது; மேலும் நமக்கு நிதி நெருக்கடி உண்டாவதால், அது இழுக்கிற திசைக்கெல்லாம் செல்லவேண்டிய கட்டாயத்தை உண்டாக்குகிறது. கிறிஸ்தவர்களால் மறுக்கமுடியாத, கட்டுப்படுத்த முடியாத அமுதம் போல கடன் இருக்கிறது. கடன் வாங்குவது ஒழுக்கமற்றது என்று சொல்லமுடியாவிட்டாலும், இது நிச்சயம் நம் ஆவிக்குரிய வாழ்வைப் பெலப்படுத்துகிற ஒன்றல்ல.

'பொருளாதாரத்தில் சிக்கனமான போக்கு அவசியம்; அல்லது, பயங்கர கடனுக்கு ஆளாகநேரிடும். செலவைக் கட்டுப்பாட்டிற்கு வையுங்கள். குஷ்டத்தை வெறுப்பதுபோல கடன்வாங்குவதை வெறுங்கள்.' - *EGW, CS, p 272.*

கடன் ஒரு பொருளாதார அடிமைத்தனமாகும்; அது 'கடன்கொடுத்தவனுக்கு அடிமையாக்குகிறது.' நீதி 22:7. இன்றைய பொருளாதார உலகில் கடன் ஒன்றறக் கலந்துவிட்டதால், அதை இயல்பான ஒன்றாகக் கருதுகிறோம். எல்லா நாடுகளுமே கடனில்தான்இருக்கின்றன; அப்படியானால்தனிநபர்கள் ஏன்கடன்வாங்கக்கூடாது? இப்படிப்பட்ட மனநிலை தவறானதாகும்.

'தேவனுடைய ஆசீர்வாதத்தால் கடனைச் செலுத்த வேண்டுமென்று பொருத்தனை செய்யுங்கள். கூழும் அப்பமும்மட்டும் கிடைத்தாலும்கூட யாருக்கும் எதிலும் கடன்படுவதில்லை என்றும் பயபக்தியோடு பொருத்தனைசெய்யுங்கள். சாப்பாடு வைக்கும்போது, தேவையற்ற ஒன்றுக்காக இருபத்தைந்து பைசாவை எறிவது எளிதாக இருக்கலாம். ஆனால், ஒன்றை மனதில் நிறுத்தவேண்டும். பைசாக்களைச் சேகரித்தால், ரூபாய் தானாய்ச் சேரும். இங்கே கொஞ்சம் பைசா அங்கே கொஞ்சம் பைசா, இதற்காகக் கொஞ்சம் பைசா அதற்காகக் கொஞ்சம் பைசா என்று செலவிடும் போது, சீக்கிரமே அது ஆயிரம் ரூபாயாக மாறிவிடும். கடன் ஏற்பட்டபிறகாவது ஆசைகளைக் கட்டுப்படுத்துங்கள். தயக்கமோ, அதைரியமோ, பின்மாற்றமோ அடையாதீர்கள். ருசிக்காக வெறிக்கச் சாப்பிடாமல் பசிக்காகமட்டும் சாப்பிட்டு, ஒவ்வொரு பைசாவையும் மிச்சப்படுத்தி, கடனை அடைத்து, விடுதலை பெறுங்கள். எல்லோருக்கும் கடனை அடைத்துவிடுங்கள். பெரிய வெற்றியைப் பெற்றிருப்பீர்கள்.' - *EGW, CS, p 257.*

கிறிஸ்தவர்கள் கடன் வாங்கினால், ஆவிக்குரிய வாழ்வு அஸ்திவாரம் ஆட்டங்கண்டுவிடும். நம் ஆவிக்குரிய அனுபவத்தைப் பெலவீனப்படுத்தி, தேவனுடைய பணிக்கு நிதியுதவி அளிக்கவிடாமல் தடுத்துவிடும். மற்றவர்களுக்கு நம்பிக்கையோடு கொடுக்கிற திறனை நாம் இழந்துவிடச் செய்கிறது; தேவன் நம்மை ஆசீர்வதிப்பதற்கான தருணங்களை இழக்கச்செய்கிறது.

தேவையில்லாமல் கடன் வாங்குவதில்லை என்று இப்போதே தீர்மானம் எடுப்பதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்? கடனைத் தவிர்ப்பதற்கு நீங்கள் எவற்றையெல்லாம் விட்டுவிட வேண்டியிருக்கும்?

## சேமிப்பும் முதலீடும்

மழைக்காலம் வருமுன் எறும்புகள் ஆகாரத்தைச் சேகரிக்கின்றன. நீதி 6:6-8. எறும்புகளிடமிருந்து பாடம் கற்றுக்கொள்வது ஞானம்; அதாவது, குறிப்பிட்ட நோக்கத்திற்காக பணம்சேமிப்பதை வழக்கமாக்கவேண்டும். சம்பாத்தியத்தை வீணாகச் செலவழிக்கக்கூடாது; பதுக்கவும் கூடாது. நாம் வாழ்க்கை வாழ, நம் தேவைகளுக்குப் போதுமான ஆதாரங்களைச் சேமிப்பது நல்லது. பணத்தைக் கையாளுவதற்கு ஞானமும், வரவுசெலவு திட்டமுறையும், ஒழுக்கமும் அவசியம். ஆனால், நமக்காக நாம் சேமிப்போமானால், தேவனுக்கு சொந்தமானவற்றிற்கு உக்கிராணக்காரர்களாக இருப்பதற்குப் பதிலாக, அவற்றைத் திருடுகிறவர்களாக மாறிவிடுவோம்.

'தேவையில்லாமல் செலவழிப்பது இருமடங்கு நஷ்டம். பணமும் கரைகிறது; சம்பாதிப்பதற்கான சாத்தியத்தையும் இழக்கிறோம். அதைச் செலவழிக்காமல் இருந்தால், சேமிப்புகள்மூலம் அதைப் பெருக்கலாம்; அல்லது கொடுத்து பரலோகத்தில் சேமிக்கலாம். சேமித்தால் பணம் நம் கட்டுப்பாட்டில் இருக்கும். பணம் தன் விருப்பம்போல நம்மை இழுக்க விடாமல், நாம் அதைக் கட்டுப்படுத்து கிறோம்.' -ரேண்டி சி. அல்கார்ன், *Money, Possessions and Eternity, p. 328.*

**நிதி சம்பந்தமான விஷயங்களை நாம் சிறப்பாகக் கையாளுவதற்கு நீதி 13:11; நீதி 21:5; நீதி 13:18 தரும் நடைமுறை ஆலோசனை என்ன?**

தேவனுடைய சொத்துக்களை நிர்வகிக்கும் உக்கிராணக்காரர்கள் குடும்பத் தேவைகளுக்காகச் சேமிக்கிறார்கள்; பரலோகத்தில் முதலீடுசெய்கிறார்கள். ஒருவர் எவ்வளவு பெற்றிருக்கிறார் என்பது முக்கியமல்ல, நிதிநிலைமை எப்படிப் பட்டதாக இருந்தாலும், வேதாகமம் சொல்கிறபடி நிர்வாகம் செய்கிறாரா என்பது தான் முக்கியமானது. குடும்பத் தேவைகளுக்காக ஞானமாகச் சேமிக்கவேண்டும். காப்பீடு போன்றவற்றின்மூலம் இடர்பாடுகளைக் குறைத்து, இழப்பைத் தவிர்க் கலாம். பிர 11:1,2. ஆசைகளைக் குறைத்துக்கொண்டு வேலைசெய்வதும், மற்ற வர்களிடமிருந்து பிரயோஜனமான ஆலோசனைபெறுவதும் வெற்றிக்கான இரு கருவிகளாகும். நீதி 24:27. தேவைகள் சந்திக்கப்பட்டு, ஆஸ்தி பெருகும்போது, 'உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே ஐசுவரியத்தைச் சம்பாதிக் கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்.' உபா 8:18.

'பரலோக ராஜ்யத்தில்' சேர்ப்பதே பாதுகாப்பான முதலீடு. மத் 13:44. அங்கு பணவீக்கம், இடர்கள், கள்ளர்கள், சந்தைவீழ்ச்சி போன்ற எதுவுமே இல்லை. அதாவது, காலியாகாத பணப்பையை கையில் வைத்திப்பது போன்றது. லூக் 12:33. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது, கணக்கைத் துவங்குவதாகும்; காணிக்கை யும் தசமபாகமும் வைப்புநிதிகளாகும். அதாவது, உலகத் தேவைகளிலும் உலக விஷயங்களிலும் எவ்வளவுதான் நாம் அக்கறைசெலுத்தவேண்டிய சூழ்நிலை உண்டானாலும், எப்போதுமே நித்திய சத்தியங்களின் மேலேயே நம் நோக்கம் இருக்கவேண்டும்.

பொறுப்புள்ள உக்கிராணக்காரர்களாக நாம் வாழ்கிற அதே வேளையில், சத்தியத்தையும் எப்போதும் நமக்குமுன் வைத்திருப்பது ஏன் அவசியமாகும்? 2கொரி 4:18.

இயல்பான ஒவ்வொரு திறனும் திறமையும் ஈவும் தேவன் தருபவை; பிறப்பிலேயே அவற்றை நாம் பெற்றிருக்கலாம் அல்லது சுற்றுச்சூழல் கற்றுத் தந்திருக்கலாம் அல்லது இந்த இரு விதங்களிலும் பெற்றிருக்கலாம். அந்தத் திறன்களையும் திறமைகளையும் நாம் எவ்வாறு கையாளுகிறோம் என்பதே முக்கியமானது. கல்வி மற்றும் நடைமுறை அனுபவம்மூலம் உக்கிராணக்காரர்கள் தங்கள் திறன்களிலும் திறமைகளிலும் நிபுணர்களாகத் திகழ்வதை தேவன் விரும்புகிறார். பிர 10:10.

பெசலெயேலுக்கு 'ஞானத்தையும் புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார்.' யாத் 35:33. அவனும் அகோலியாவும் மற்றவர்களுக்கும் அவற்றைப் போதிக்கிற திறனைப் பெற்றிருந்தார்கள். யாத் 35:34.

நல்ல உக்கிராணக்காரர்களாக வாழவும், பொருளாசை உலகில் கடனில்லாமல் வாழவும் பழகவேண்டும். வாசித்தல், கருத்தரங்குகளில் கலந்துகொள்தல், முடிந்தால்முறையான கல்விகற்றல் போன்றவற்றின்மூலம் நம் திறன்களை வளர்த்து, கற்றதைச் செயலில் கடைப்பிடிக்கவேண்டும். திறன்வளர்க்கும்போது தேவனுக்கு உச்சிதமானதைக் கொடுக்கலாம்; நல்ல உக்கிராணக்காரர்களாகத் திகழலாம்.

ஒவ்வோர் ஊழியனுக்கும் 'அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக' தாலந்து கொடுக்கப்பட்டது. மத்25:15. இருவர்தான்தங்களுக்குள்ளதைஇரட்டிப்பாக்கினார்கள்; மூன்றாமவன் அதை நிலத்தில் புதைத்தான். நாம் பெற்றுள்ளதை மேம்படுத்த முயலவேண்டும்; தாலந்தைப் புதைத்துவைப்பது திறனோ, திறமையோ அல்ல. பண நிர்வாகம், கடனிலிருந்து விடுபடல், ஒழுக்கத்தை வளர்த்தல், அனுபவம் போன்றவை தேவனுக்குப் பிரியமான நிபுணத்துவங்களை உருவாக்குகின்றன.

'வேதாகமப் போதனைகளை அனுதின வாழ்வில் அப்பியாசிக்கும்போது, குணத்தில் அவை நீடித்த, ஆழமான தாக்கத்தை உண்டாக்குகின்றன. தீமோத்தேயு இந்தப் போதனைகளை அறிந்து, கடைப்பிடித்தார். அவரிடம் விசேஷித்த தாலந்துகள் எதுவும் இல்லை. ஆனால், தன் எஜமானாகிய தேவன் கொடுத்திருந்த திறமைகளை அவருடைய சேவைக்காகப் பயன்படுத்தியதால், அவருடைய பணி ஒப்பற்றதாக இருந்தது.' – *EGW, AA, p 205.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *தன்னடக்கம் கிறிஸ்தவர்களுக்கு முக்கியமானது; இல்லையேல் அது வறுமைக்கும் அழிவுக்கும் வழிநடத்தும். இத்தகைய பிரச்சனையில் இருப்போருக்கு, சபையாக நாம் என்ன செய்யலாம்?*

2. *நம் அனுதின வாழ்விலும் பிறரோடுள்ள உறவிலும் ரோமர் 13:7,8இன் போதனைகளை எவ்வாறு கடைப்பிடிக்கலாம்?*

3. *இயேசு சீக்கிரம் வரப்போவதால் கடன்பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டாமெனச் சிலர் சொல்கிறார்கள். இதற்கு உங்கள் பதில் என்ன?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: **போதகர் சாத்ராக் சாமுவேல்,**

**டாக்டர் ஏ. ஜான்சன்**

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*